**கடற்றொழில் வெகுமதி நிதியம் - 2024**

------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொலில் மற்றும் நீர்வள சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது. மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரிசோதனை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கை மீது கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டிடும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடற்றொழில் வெகுமதி நிதியமாகிய ரூபா 8,734,648 இற்கான மீதியில் பரிசுகளாக பரிசு பெறுவோருக்கு செலுத்து வேண்டிய தொகைகள் மற்றும் செலுத்த வேண்டிய அரச பங்களிப்புத் தொகையை வெவ்வேறாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பித்திருக்கவில்லை. | இந்த ரூபா 6,893,297 இற்கான அறுதியாக இனங்கண்டிருக்காத மீதி, 2021 ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் போது கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த தொகைகளில் ஒவ்வொரு சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக புதிய உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளின் மீதிகளை அறுதியாக இனங்காண முடியாமை மற்றும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய மீதிகளை சரியாக இனங்காண முடியாமை ஆகிய காரணங்கள் காணப்படுவதுடன், இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்:டு வருகின்றது. | பரிசுகளாக பரிசு பெறுவோருக்கு செலுத்த வேண்டிய தொகைகள் மற்றும் செலுத்த வேண்டிய அரச பங்களிப்பு தெளிவாக இனங்காண வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வளச் சட்டம் | | | |
| (அ) பிரிவு 59(2) | கடற்றொழில் மற்றும் நீர்வளத் திணைக்களத்தினால் 2018 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டங்களின் வெகுமதி நிதியத்தின் கருமங்களை இனங்கண்டு ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வளச் சட்டத்தின் பிரிவு 51 இற்கு இணங்க பரிமுதல் செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் மீன்களின் ஏலவிற்பனையின் மூலம் கிடைக்கக்கூடிய பணம் மாத்திரம் கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. அதன்படி, கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்காக முன்மொழியப்பட்ட போதிலும், மேற்கொள்ளப்பட்டிருந்த சுற்றிவலைப்புகள் மற்றும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட எண்ணிக்கையின் படி கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு பணம் செலவு வைக்கப்படும் எண்ணிக்கை தொடர்பாக எதிர்வுகூறலொன்று மேற்கொள்ள முடியாமையால் கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்காக 2024 ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | வெகுமதி நிதியத்தின் கருமங்களை இனங்கண்டு ஆக்கபூர்மாக நிறைவேற்றுவதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) பிரிவு 59(4) | 2017, 2018 மற்றும் 2020 ஆண்டுகளின் போது சட்டவிரோத கடற்றொழில் அலுவல்களை சுற்றிவலைப்பு மேற்கொண்டு முறையே 427, 327 மற்றும் 536 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட போதிலும், அந்த ஆண்டுகள் தொடர்பாக எதுவித வெகுமதித் தொகையும் சுற்றிவலைப்புக்கள் மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்தியிருக்கவில்லை. 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வெகுமதித் தொகை ரூபா 3,143,335 தொகை எனினும், | 2017 ஆண்டின் போது 427 வழக்குகள், 2018 ஆண்டின் போது 327 வழக்குகள் மற்றும் 2020 ஆண்டின் போது 536 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட போதிலும், கடற்றொழில் மற்றும் நீர்வளச் சட்டத்தின் பிரிவு 51 இற்கு இணங்க பரிமுதலாக்கப்பட்ட பண்டங்கள் மற்றும் மீன்களை ஏலவிற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணம் மாத்திரம் கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றமையால் வழங்குகளின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைத்தல் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், | உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி நிதியம் வழங்குவதற்காக துரித செய்முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 2024 ஆண்டின் போது தாக்கல் செய்யப்பட்டிருந்த 672 வழக்குகளில் 04 வழக்குகள் தொடர்பாக சுற்றிவலைப்புக்களில் பங்குபற்றி உத்தியோகத்தர்களுக்கு செலுத்தியிருந்த வெகுமதித் தொகையின் எண்ணிக்கை ரூபா 55,980 தொகை மாத்திரமாக கடந்த ஆண்டுகள் தொடர்பாக வழக்குகள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 9,968,225 இற்கான தொகையில் எதுவித தொகையும் மீளாய்வாண்டின் போது செலுத்தியிருக்கவில்லை. இதன்படி, உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி தொகை செலுத்துவதில் துரித செய்முறையொன்று தயாரிக்கப்படாமையால் சட்டவிரோத கடற்றொழில் அலுவல்களை சுற்றிவலைப்புக்காக உத்தியோகத்தர்களை ஊக்குவித்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது என அவதானிக்கப்படவில்லை. | இந்த ஆண்டுகளின் போது செலவு வைக்கப்பட்டிருந்த வருமானங்கள் தொடர்பாக இனங்காணப்படாத உத்தியோகத்தர்கள் காணபப்படாமையாலும், உரிய அறிக்கைகள் காணப்படாமையாலும் சில சட்ட நடவடிக்கைகளுக்காக கொடுப்பனவு செய்ய முடியாமலிருந்தது. மேலும், இனங்காணப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடரபாக அறிக்கைகள் வழங்குவதற்கு குறிப்பிட்ட காலம் வழங்கப்பட்டு இந்தத் தொகை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு சுற்றிவலைப்பு மேற்கொள்தற்கு சுற்றிவலைப்பில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களை அறுதியாக இனங்காண முடியாமை இலங்கை கடற்படை, இலங்கை கரையோர பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் அடிக்கடி இடமாற்றம் செய்யப்படல், வழக்கு அலுவல்கள் முடிவடைந்த நாள் முதல் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு சில சந்தர்ப்பங்களில் நீண்ட காலமொன்று எடுப்பதனால் கடற்றொழில் வெகுமதி நிதியத்தை பெற்றுக்கொள்வதற்காக சில உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்த போதிலும் அது தொடர்பான அறிக்கைகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் ஆகிய விடயங்கள் காரணமாக கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 142,948 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 372,570 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 229,622 இற்கான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. அந்த குறைவிற்கு பரிமுதல் செய்யப்பட்ட பண்டங்களின் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டிற்கு நேரொப்ப 2023 ஆண்டின் போது நீதி மன்றங்களில் இருந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற தொகை ரூபா 13,060,405 இனால் அதாவது 89 சதவீதத்தினாலும் 2023 ஆண்டிற்கு நேரொப்ப 2024 ஆண்டின் போது ரூபா 918,486 தொகை எனப்படும் 61 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. அதேபோல், 2022 ஆண்டிற்கு நேரொப்ப 2023 ஆண்டின் போது நிதியத்திலிருந்து வெகுமதியாக செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 9,795,303 தொகையினால் அதாவது 89 சதவீதத்தினாலும் 2023 ஆண்டிற்கு ஒப்பாக 2024 ஆண்டின் போது ரூபா 688,864 தொகை எனப்படும் 61 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. | சுற்றிவலைப்பு மேற்கொள்வதற்காக பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் விசாரணைப் பிரிவில் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் போதியளவு காணப்படாமை. மாவட்ட அலுவலகங்களின் சில உத்தியோகத்தர்கள் சம்பளத்துடன் வெளிநாடு சென்றிருந்தமையால் வெற்றிடங்கள் காணப்படல், தற்போது காணப்படுகின்ற வரையறையான உத்தியோகத்தர்கள் மூலம் அத்தியவசியமான அனைத்து கருமங்களும் மேற்கொள்ள நேரிடல், 2022 ஆண்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஆகிய காரணங்களினால் சுற்றிவலைப்புக்கள் மற்றும் வழக்குத் தாக்கல் செய்தல் தொடர்பாக தயாரிக்கப்படுகின்ற செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்படுவதற்கு முடியாமல் போதல், செலவு வைக்கப்பட்ட தொகை மற்றும் வெகுமதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கையின் சதவீதம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் குறிக்கோள் ஒன்றான சட்டவிரோத செயற்பாடுகள் மீது சுற்றிவலைப்பு மேற்கொள்ளல், வெகுமதிகளுக்கு உரிமையான உத்தியோகத்தர்களுக்கு வெகுமதிகள் வழங்கல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் படி 2024 திசெம்பர் 31 திகதி அளவில் நீதி மன்றங்களில் இருந்து பெற வேண்டிய பரிமுதல் செய்யப்பட்ட மீன்களின் விற்பனை வருமானம் ரூபா 1,984,300 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 44,656 தொகை 10 வருடங்க்ள முதலும், ரூபா 889,662 தொகை 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதலும், ரூபா 169,187 | முன்னைய ஆண்டுகளின் போது நீதிமன்றங்களில் வைப்புச் செய்யப்பட்ட பரிமுதல் தொடர்பான பணம் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களிடம் பெற வேண்டியவை என தலைமை அலுவலகத்திற்கு வழங்கியிருந்த போதிலும், அந்தப் பணம் வழக்கு முடிவில் கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கும் படி கோறிக்கை விடுத்திருக்காமையால் சுமார் 10 வருட காலம் முதல் அந்த | நிலுவை மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்டுத்திக்கொள்வதற்கும் மற்றும் இதுவரை அறவிடப்படாமைக்கான காரணங்களை கண்டறிந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேசண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்பட்ட மீதிகளாகும். 2024 ஆண்டிற்கான பரிமுதல் செய்யப்பட்ட மீன்களின் விற்பனை மூலம் ரூபா 601,091 தொகை மாத்திரம் வெகுமதி நிதியத்திற்கு கிடைத்திருந்தது. இந்த மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு மற்றும் இதுவரை அறவிடப்படாமைக்கான காரணத்தை கண்டறிந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், ஒவ்வொரு ஆண்டுகளின் போதும் பூர்த்தி செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக நீதி மன்றங்களில் வைப்புச் செய்யப்பட்ட தொகை மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களை அறிவுறுத்தி அந்தத் தொகையினை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன்படி, நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதில் பலவீன நிலைமையொன்று காணப்பட்டது. | பெறவேண்டிய தொகைகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. அதேபோல், இது தொடர்பாக காணப்பட்ட சிக்கல்களை குறைத்துக்கொள்வதற்காக மாவட்ட கடற்றொழில் அலுவலகங்கள் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அலுவல்கள் முடிவடைந்து நீதிமன்றத் தீர்ப்பின் படி குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளியான சந்தர்ப்பத்தில் நீதி மன்றத்தின் மூலம் பரிமுதல் செய்யப்பட்ட வைப்புத்தொகை ஒரு மாதத்தினுள் திணைக்கள கடற்றொழில் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைத்துக்கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என உள்ளகச் சுற்றறிக்கை மூலம் அனைத்து மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு முறைப்பிரகாரம் அறிவுறுத்தப்பட்டடுள்ளது. | |
| (இ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சுற்றிவலைப்புகளுக்காக பங்களிப்பு செய்த உத்தியோகத்தர்களுக்காக செலுத்தப்பட வேண்டிய வெகுமதிக் கொடுப்பனவு ரூபா 3,143,335 தொகை மீதியில் 05 வருடங்களுக்கு மிகையான ரூபா 3,409 தொகையும், 02 வருடங்களுக்கு மிகையான ரூபா 1,593,371 தொகையும் காணப்பட்டதுடன், அந்த சுற்றிவலைப்புகளுக்காக பங்களிப்புச் செய்த உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பபட வேண்டிய வெகுமதிக் கொடுப்பனவினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024.12.31 திகதி சுற்றிவலைப்புகளுக்காக பங்களிப்பு செய்த உத்தியோகதர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வெகுமதி கொடுப்பனவு என ரூபா 3,143,335 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சுற்றிவலைப்புக்காக பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் தொடர்பான காலப் பகுப்பாய்வு மற்றும் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நீதி மன்றங்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ள தொகைகள் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களை அறிவுறுத்தி அந்த தொகையினை தருவித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களினால் தயாரிக்கப்படுகின்ற சட்ட விரோத அலுவல்கள் தொடரபாக கைது செய்வதற்காக வெளிக்கள பரிசோதனை மேற்கொள்ளல் தொடர்பாக உரிய மதிப்பீடுகள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், அந்த மதிப்பிடுகள் மற்றும் இலக்குகளை நெருங்கியிருக்கவில்லை. | கடற்றொழில் மற்றும் நீர் வளத் திணைக்களத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கும் போது சுற்றி வலைப்புக்கள், வழக்குத் தாக்கல் செய்தல் தொடர்பாக திட்டங்கள் அபிவிருத்திப் பிரிவினால் தயாரிக்கப்படுகின்றது. மேலதிக கடமைகளுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் தட்டுப்பாடு காரணமாக சுற்றிவலைப்புக்காக பங்குவற்றும் உத்தியோகத்தர்கள் குறைவடைதல் காரணத்தினால் இந்த இலக்குகளை அடைவதற்கு முடியாமல் இருந்தது. | கைது செய்வதற்காக வெளிக்கள பரிசோதனை செய்தல் மேற்கொள்வதற்காக உரிய மதிப்பீடு மற்றும் மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களினால் இலக்குகள் தயாரிக்கப்பட்டு அந்த இலக்குகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கடற்றொழில் மற்றும் நீர்வள திணைக்களத்தின் விசாரணைப் பிரிவின் மூலம் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி சாட்சிகள் திட்டமிடப்பட்ட சுற்றிவளைப்புக்கள் 2023 ஆண்டில் திட்டமிடப்பட்ட சுற்றிவலைப்புக்கள் எண்ணிக்கையில் 47 சதவீதமாக காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது அவ்வாறான சுற்றிவலைப்புக்கள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடற்றொழில் மற்றும் நீர் வளத் திணைக்களத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது சுற்றி வலைப்புக்கள், வழக்குத் தாக்கல் செய்தல் தொடர்பாக திட்ட அபிவிருத்திப் பிரிவினால் தயாரிக்கப்படுகின்றது. மேலதிக கடமைகளுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் தட்டுப்பாடு காரணமாக சுற்றிவலைப்புக்காக பங்குவற்றும் உத்தியோகத்தர்கள் குறைவடைதல் காரணத்தினால் இந்த இலக்குகளை அடைவதற்கு முடியாமல் இருந்தது. | சுற்றிவலைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு திட்டமிடப்பட்ட இலக்குகளை நெருங்க வேண்டும். |
| (ஊ) | வெகுமதி நிதியத்திற்காக தனியாக வங்கிக் கணக்கொன்று பேணிச் செல்லாமல் திணைக்களத்தின் வங்கிக் கணக்கு வெகுமதி நிதியத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வளச் சட்டத்தின் கீழ் நியதிச்சட்ட நிதியமொன்றென ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த காலம் முதல் திணைக்களத்தின் வங்கிக் கணக்கினூடாக கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் பணச் சுற்றோட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எண்ணிக்கைசார் குறைந்த | வங்கிக் கணக்கொன்று பேணிச் சென்று வங்கி உறுதிப்படுத்தல், வங்கி இணக்கக் கூற்றுக்கள் மற்றும் வங்கிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொகையொன்று சுற்றோட்டப்படுவதால் திணைக்களத்தின் வங்கிக் கணக்கூடாக நிதியத்தின் பணச் சுற்றோட்ட அலுவலக்ள மேற்கொள்ளப்பட்டது. அதற்குரிய வங்கி உறுதிப்படுத்தல்கள் வங்கிக்கூற்றுக்கள் மற்றும் வங்கி இணக்க்கூற்றுக்கள் பொதுவாக காணப்படுவதுடன் அதனூடாக கணக்குப் பதிவு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (எ) | சட்டவிரோதமாக கடற்றொழில் அலுவல்கள் நடைபெறும் போது கடற்படையினால் கைது செய்யும் சந்தர்ப்பங்களும், துப்புக்கள் கிடைத்தலூடாக செயற்பாடுகள் மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களும், மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களில் தேடுதல் செயற்பாடுகள் மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களையும் இனங்காணக்கூடியவாறு ஆவணப்படுத்தப்பட்டு விரைவாக கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு ஆவணப்படுத்தல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், இந்த வெகுமதிகள் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்தி சட்டவிரோதமான செயற்பாடுகளின் சுற்றிவலைப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வள சட்டத்தின் பிரிவு 59(1) இன் கீழ் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டது சட்ட விரோதமான கடற்றொழில் அலுவல்களை சுற்றிவலைப்புக்காக உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் குறிக்கோளுடனாக காணப்பட்ட போதிலும், அந்த குறிக்கோள் நிறைவேற்றப்படும் விதத்தில் செயற்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற அலுவல்கள் முடிவடைந்ததுடன், அதற்குரிய நலன்கள் நலன்பெறுவோருக்கு வழங்குவதற்காக சுற்றிவலைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் விபரங்கள் வெற்றிகரமான சுற்றிவலைப்பொன்று மேற்கொண்டு முடிவடைந்த உடனேயே உரிய தகவல் முறைமைக்கு சரியான தகவல் உட்படுத்தப்பட்டு சரியாக பேணிச் செல்ல வேண்டும் என அனைத்து உதவிப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், துப்பு வழங்குவதற்காக மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு தகவல்கள் வழங்குவதற்கு அல்லது கடற்றொழில் மற்றும் நீர்வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு நேரடியாக தகவல்கள் வழங்குவதற்காக Whatsapp குறுஞ்செய்தி வழங்கும் படி அனைத்து மாவட்ட செயலகங்கள் ஊடாக அறிவித்தல் வெளியிடப்பட்டு அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, மீனவ சமூகம் மற்றும் உத்தியோகத்தர்கள் கடற்றொழில் வெகுமதி நிதியத்தின் நலன்கள் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. | இந்த நிதியம் நிறுவப்பட்ட குறிக்கோளாகிய சட்டவிரோதமான கடற்றொழில் அலுவல்களை சுற்றிவலைப்பிற்காக உத்தியோகத்தர்களை ஊக்குவிப்புக்கள் ஏற்படக்கூடியவாறு செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | வெகுமதிகள் பெறுவோருக்கு வெகுமதி நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யும் போது அந்த வெகுமதி பெறுவோரின் தகவல்கள் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படக்கூடியவாறு சுற்றிவலைப்புக்களில் பங்குபற்றியவர்களின் பெயர், பதவி, நிறுவனம், வழக்கு இலக்கம், கொடுப்பனவு உறுதிச்சீட்டு இலக்கம், கொடுப்பனவை பெறுபவரின் கையொப்பம் அகியவை அடங்கிய பதிவோடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அதன்படி, உரிய முறையில் தகவல்கள் பேணிச் செல்லாமையால் குறிப்பிட்ட நபர்களுக்கு செலுத்தாமல் விடுவதற்கும் வெகுமதிக்கு உரித்தில்லாத ஆட்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கும் பெற வேண்டிய அரச வருமானம் ஒன்றை இழப்பதற்கு சந்தர்ப்பம் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | சுற்றிவலைப்புக்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் பெயர், பதவி, வழக்கு இலக்கம், கொடுப்பனவு உறுதிச்சீட்டு இலக்கம் ஆகிய தகவல் அடங்கி பதிவேடொன்று தற்போது பேணப்பட்டு வருகின்ற போதிலும் வெளி நிறுவனங்களின் உத்தியோகத்தர் கையொப்பம் பெற்றுக்கொள்வதில் செய்முறை சார் கடினங்கள் காரணமாக அந்தப் பணம் அவர்களின் கணக்கிற்கு செலவு வைத்து அந்தப் பற்றுச்சீட்டு அல்லது காசோலை பதிவுத் தபால் மூலம் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு ஒப்படைத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. | வெகுமதி பெறுவோருக்கு வெகுமதி நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யும் போது வெகுமதி பெறுவோரின் தகவல்கள் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு தகவல்கள் அடங்கிய பதீவேடொன்று பேணிச் செல்ல வேண்டும். |
| (ஐ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒவ்வொறு கடற்றொழில் அலுவலகங்களில் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பண்டங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று / கணித்தலொன்று மேற்கொண்டிருக்காததுடன், அதன் காரணமாக 2024 வெகுமதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணையில் காட்டப்பட்டிருந்த கைப்பற்றப்பட்டுள்ள பண்டங்கள் உண்மையாகவே காணப்படுகின்றனவா என உறுதிப்படுத்தலொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒவ்வொரு கடற்றொழில் அலுவலகங்களிலும் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பண்டங்கள் தொடர்பாக உதவிப் பணிப்பாளரின் பரிந்துரையின் படி அறிக்கை பெற்றுக்கொள்வதுடன், அவர்கள் அந்த பண்டங்கள் தொடர்பான அறிக்கை தயாரிக்கும் போது அதற்குரிய பண்டக் கணிப்பீடு மேற்கொண்டு அந்த அறிக்கை சரியாக தயாரிக்கப்படுகின்றது. அதன்படி, கைப்பற்றப்பட்டு காணப்படுகின்ற பண்டங்கள் உண்மையாகவே காணப்படுகின்றதுடன், அதனை பண்டங்க கணிப்பீடொன்றுக்கு சமமாக கணிக்க முடியும். | ஒவ்வொரு கடற்றொழில் அலுவலகங்களிலும் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பண்டங்கள் தொடர்பான கணிப்பீடொன்று / கணித்தலொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |